**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 704/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.4 |
| Name : | திருமதி. உண்ணாமலை (தலைமை காவலர்) |
| Father's/Husband Name: | திரு. அறிவானந்தன் |
| Village : | குன்னம் காவல் நிலையம் |
| Taluk : | குன்னம் |
| Age : | 50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.05.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரி வீரமுத்து ஆஜர்)**

**முதல் விசாரணை**

i) நான் தற்போது குன்னம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் பொற்செல்வன் ஆவார். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14.08.2023ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் பணியிலிருந்த போது ரவிச்சந்திரன் மனைவி உஷா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக கொடுத்த புகாரைப் பெற்று குன்னம் காவல் நிலைய குற்ற எண் 352/2023, பிரிவுகள் 294(b), 354(A), 506(1) இதச வின் கீழ் காவல் உதவி ஆய்வாளர் எதிரி மீது வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார் அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வழக்கு கோப்பினை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வழக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ரவிச்சந்திரன், லதா ஆகியோர் முன்னிலையில்

சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவை **முறையே பார்வை மகஜர் அ.சா.ஆ4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் சாட்சிகள் உஷா, செல்வராசு, செந்தில்குமார், லதா, ரவிச்சந்திரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரி முன்பிணை பெற்றுள்ளதால் கைது செய்யவில்லை. இறுதியாக புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் கடந்த 06.10.2023ம் தேதி 294(b), 354(A), 506(1) இதச வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் எந்த சாட்சிகளையும் நான் நேரடியாக விசாரிக்கவில்லை என்றாலும் ஆவணங்களில் உள்ளது போல் சம்பவயிடம் சென்று சாட்சிகள் விசாரிக்கவில்லை என்றாலும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும் சம்பவம் எதுவும் நடைபெறாததால் தான் நீதிமன்றத்தில் சாட்சிகள் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை இல்லை**

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.